# இந்தியாவில் மகளிர் ஆணையத்தின் மெதுவான மரணம்

## தேசிய மகளிர் ஆணையம்

தேசிய மகளிர் ஆணையம் சட்டம் 1990 இன் படி, என்.சி.டபிள்யூ.-வில் பெண்களின் மேம்பாட்டுக்காக உழைக்கும் ஒரு தலைவர் மற்றும் வெவ்வேறு துறைகளில் இருந்து இரண்டு எஸ். சி. மற்றும் எஸ். டி. கொண்ட ஐந்து உறுப்பினர்கள் இருக்கவேண்டும். இந்த ஆணையத்தில் புகார்கள் மற்றும் புலனாய்வு பிரிவு, சட்ட பிரிவு மற்றும் கொள்கை கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி பிரிவு ஆகியவை கொண்டுள்ளது.

## குறைபாடுகள்

இந்த ஆணையத்தற்கு உறுதியான சட்டமன்ற அதிகாரங்கள் இல்லை. இதற்கு திருத்தங்களை பரிந்துரைப்பதற்கும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் மட்டுமே அதற்கு அதிகாரம் உள்ளது. இவைகளுக்கு அரசாங்கம் கட்டுப்பட்டது இல்லை. மேலும், என்.சி.டபிள்யூ. உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது, இதனால் பெரும்பாலும் நியமிக்கப்பட்ட NCW உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் தவறுகளை கண்மூடித்தனமாக புறக்கணிக்கிறார்கள்.

2012 ஆம் ஆண்டில், கான்பூரில் உள்ள ஒரு பெண்கள் கல்லூரியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், அப்போதைய மத்திய மந்திரி பிரகாஷ் ஜெய்ஸ்வால் கருத்து தெரிவிக்கையில்: "ஒரு மனைவி வயதான பின், தனது கவழ்ச்சியை இழந்து விடுகிறார், பின்னர் சுவாரஸ்யம் ஏதும் இல்லை". டெல்லியைச் சேர்ந்த தகவல் அறியும் ஆர்வலர் சுபாஷ் அகர்வால் அவர் மீது புகார் அளித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார்.

இதைத் தொடர்ந்து, அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அப்போதைய என்.சி.டபிள்யூ கமிஷனர் மம்தா ஷர்மா இடையே பிரகாஷ் ஜெய்ஸ்வாலின் நடவடிக்கையை கண்டித்து கடிதங்கள் பரிமாறப்பட்டன. இருப்பினும், அவர் மீது முறையான எந்த சட்டப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2014 ஆம் ஆண்டில் கமிஷனின் தேர்வு செயல்முறையிலிருந்து அரசியல் விருப்பத்தை நீக்குமாறு உச்ச நீதிமன்றம் அரசாங்கத்திடம் கோரியது, இது நியமனம் செய்வதற்கான விதிகளில் திருத்தங்களுக்கு வழிவகுத்தது. இருப்பினும், நியமிக்கப்பட்ட கமிஷனர்கள் ஆளும் கட்சியுடன் இனியும் வலுவான உறவுகளைக் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

2014-2017 தலைவர் லலிதா குமாரமங்கலம் முன்பு பாஜகவின் தேசிய செயலாளராக இருந்தார்.

2017 ஆம் ஆண்டில், என்.சி.டபிள்யூ.-விற்க்கு கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு நியமிக்கப்பட்ட தலைவர் யாரும் இல்லை. மேலும், 2018 ஆம் ஆண்டில், தற்போதைய தலைவர் பதவியேற்றபோது, கமிஷனின் 5 உறுப்பினர் இடங்களும் மூன்று மாதங்களுக்கு காலியாக இருந்தன. அந்த நேரத்தில் எஸ்சி மற்றும் எஸ்டி-விற்க்கு ஒதுக்கப்பட்ட இடங்களும் 2-3 ஆண்டுகளாக காலியாக இருந்தன.

தற்போதைய தலைவர (2018-இப்போது), ரேகா சர்மா முன்பு பாஜகவின் மாவட்ட செயலாளராகவும், ஊடக பொறுப்பாளராகவும் இருந்தார்.

## இதற்கு தீர்வு என்ன?

பிரச்சினைகள் இருந்தாலும், பெண்களின் மேம்பாட்டிற்கு என்.சி.டபிள்யூ.-வின் இருப்பு அவசியம் மற்றும் முக்கியமானது. கமிஷனை உண்மையிலேயே சுயாதீனமாகவும் பயனுள்ளதாகவும் ஆக்குவது அவசியம்.

ட்ரான்ஸ்ஜெண்டர்கள் மற்றும் எஸ்.சி, எஸ்.டி அல்லாது பிற சாதிகளின் பெண்கள் போன்ற ஓரங்கட்டப்பட்ட வர்கங்களுக்கு அதிகரித்த பிரதிநிதித்துவமும் உறுப்பினர் இருக்கை முன்பதிவு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும், மேலும் இந்த சமூகங்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த பயனுள்ள பணிகள் செய்யப்பட வேண்டும்.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவைப் பின்பற்றி, என்.சி.டபிள்யூ உருவாக்கத்தின் உண்மையான நோக்கத்தை கருதி, பெண்களின் சிறந்த நலன்களுக்காக உழைத்தவர்கள் மற்றும் தொடர்ந்து அவ்வாறு செய்வவர்கள், எந்தவொரு அரசியல் தொடர்புகளும் தடைகளும்

இல்லாமல் இருப்பவர்களை மட்டுமே உறுப்பினர்களாக அல்லது அமைப்பின் ஆணையர்கள் நியமிக்கப்பட வேண்டும்.